## கத்திப்பாரா மேம்பாலத்தின் கீழ் பகுதியில்

# பல்வேறு அம்சங்களுடன் பொழுதுபோக்கு பூங்கா



▶ பொழுது போக்கு பூங்கா அமைய உள்ள இடம்.

ஆலந்தூர், ஆக. 20: கிண்டி கத்திப்பாரா மேம்பாலம் கடந்த 2008ம் ஆண்டு திமுக ஆட்சியில் கட்டப்பட்டது. இந்த மேம்பாலத்தின் கீழ் தாம்பரத்தில் இருந்து பூந்தமல்லி செல்லவும், பூந்தமல்லியில் இருந்து கே.கே. நகர் செல்லவும், கே.கே.நகரில் இருந்து அண்ணா சாலை செல்லவும், அண்ணா சாலையில் இருந்து தாம்பரம் செல்லவும் 4 சர்வீஸ் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுதவிர, மேம்பாலத்தின் கீழ், பாதசாரிகளின் வசதிக்காக சிறிய சுரங்கப்பாதை அமைக்கப்பட்டது.

இந்த சுரங்கப்பாதையில் இரவு நேரங்களில் குடிமகன்களின் அட்டகாசம் அதிகரித்து காணப்பட்டதாலும், மின் விளக்குகள் சரிவர எரியாததாலும், பயணிகள் இதனை பயன்படுத்துவதை தவிர்த்தனர். இதனால், ஒரு சுரங்கப்பாதை மூடப்பட்டது. இந்த பாலத்தின் மையத்தில் தூண்கள் அமைக்கப்பட்டு, மீனம்பாக்கம் - கோயம்பேடு வழித்தட மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. கத்திப்பாரா மேம்பாலத்தின் கீழ் பகுதியில் பல ஏக்கர் பரப்பிலான நிலம் காலியாக உள்ளது. இங்கு, தனியார் சிலர் தங்களது வாகனங்களை நிறுத்தி வந்தனர்.

## விரைவில் பணிகள் துவக்கம்

இந்நிலையில், மேற்கண்ட இடத்தில் சென்னை மெட்ரோ நிர்வாகம், மாநகராட்சி மற்றும் நெடுஞ்சாலை துறையுடன் இணைந்து, பொழுதுபோக்கு பூங்கா அமைக்க திட்டமிட்டுள்ளது. செயற்கை நீரூற்று, அலங்கார விளக்குகள், சிறுவர் விளையாட்டு உபகரணங்கள், இருக்கைகள், நடைபாதையுடன் கூடிய பூங்கா, திறந்தவெளி திரையரங்கம், கலையரங்கம், உணவகங்கள், பார்க்கிங் உள்ளிட்டவை இங்கு ஏற்படுத்தப்பட உள்ளன.

முதற்கட்டமாக, மேம்பாலத்தின் கீழ் உள்ள பகுதியை பொக்லைன் இயந்திரம் மூலம் சமன் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியில் அதிகாரிகளுக்கான தற்காலிக குடில்கள் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணிகள் ஒரு ஆண்டுக்குள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வரும் எனவும், அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரி ஒருவர் கூறுகையில், 'மேம்பாலத்தின் கீழ் பகுதியில் பொழுதுபோக்கு பூங்கா அமைக்க திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்பு, அதிகாரிகள் ஆய்வுகளுக்கு பின் அறிவிக்கப்பட உள்ளது,' என்றனர்.